## முக்கிய குறிப்புகள்

### திசுதொகுப்புகள்

அமைப்பு, தோற்றத்தில் ஒன்றுபட்ட (அ) வேறுபட்ட ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்யும் செல்களின் தொகுப்பு.

| | |
|---|---|
| **தோல் / புறத்தோல் திசுத்தொகுப்பு** | இது புறத்தோல் (உட்புறத் திசுக்களைப் பாதுகாக்கிறது), புறத்தோல் துளை (நீராவிப்போக்கு நடைபெற உதவுகிறது), கியூட்டிக்கிள் (நீராவிப்போக்கினை தடுக்கிறது), வேர்த்தூவிகள் (நீர் & கனிமங்களை உறிஞ்சுகிறது), ஆகியவற்றைக் கொண்டுள்ளது. |
| **அடிப்படை / தளத்திசுத் தொகுப்பு** | புறத்தோலும் வாஸ்குலார் திசுக்களும் நீங்கலாக உள்ள அனைத்து திசுக்களும் இத்திசுத்தொகுப்பில் அடங்கும். i) புறணி ii) அகத்தோல் iii) பெரிசைக்கிள் iv) பித் |
| **வாஸ்குலார் திசுத்தொகுப்பு** | ***வாஸ்குலார் கற்றைகள் :*** சைலம் மற்றும் புளோயம் கற்றை வடிவில் உள்ளன. சைலம் நீர் &கனிமங்களை கடத்துகிறது &புளோயம் உணவுப் பொருள்களை கடத்துகிறது.<br>**(i) ஆரப்போக்கு அமைந்த வாஸ்குலார் கற்றை :**<br>கற்றைகள் அடுத்தடுத்து வெவ்வேறு ஆரங்களில் அமைந்துள்ளன. ***எ.கா :*** வேர்.<br>**(ii) ஒன்றிணைந்த வாஸ்குலார் கற்றை :**<br>சைலமும் புளோயமும் ஒரே ஆரத்தில் ஒரு கற்றையில் அமைந்துள்ளன.<br>***a) ஒருங்கமைந்தவை :*** சைலம் மையப்பகுதியை நோக்கியும் புளோயம் வெளிப்புறத்தை நோக்கியும் அமைந்துள்ளன.<br>• கேம்பியம் காணப்பட்டால் அவை திறந்த ஒருங்கமைந்த வாஸ்குலார் கற்றை எனப்படும். ***எ.கா :*** இருவிதையிலைத் தாவர தண்டு.<br>• கேம்பியம் காணப்படவில்லை என்றால் அவை மூடிய ஒருங்கமைந்த வாஸ்குலார் கற்றை எனப்படும். ***எ.கா :*** ஒருவிதையிலைத் தாவர தண்டு.<br>***b) இருபக்க ஒருங்கமைந்தவை :*** சைலத்திற்கு வெளிப்பக்கமும் உள்பக்கமும் புளோயம் காணப்படுகிறது. ***எ.கா :*** குகர்பிட்டா.<br>**(iii) சூழ்ந்தமைந்த வாஸ்குலார் கற்றை :** சைலத்தைச் சூழ்ந்து புளோயமோ அல்லது புளோயத்தைச் சூழ்ந்து சைலமோ காணப்படும்.<br>***a) சைலம் சூழ் வாஸ்குலார் கற்றை :*** *சைலம் புளோயத்தை முழுவதுமாக சூழ்ந்து காணப்படும்.* ***எ.கா :*** *டிரசீனா.*<br>***b) புளோயம் சூழ் வாஸ்குலார் கற்றை :*** *புளோயம் சைலத்தை முழுவதுமாக சூழ்ந்து காணப்படுகிறது.* ***எ.கா :*** *பெரணிகள்*<br>***உள்நோக்கிய சைலம் (எண்டார்க்) :*** புரோட்டோசைலம் மையத்தை நோக்கியும் மெட்டா சைலம் வெளிப்புறத்தை நோக்கியும் காணப்படுவது. ***எ.கா :*** தண்டு.<br>***வெளிநோக்கிய சைலம் (எக்ஸார்க்) :*** புரோட்டோசைலம் வெளிப்புறத்தை நோக்கியும் மெட்டா சைலம் மையத்தை நோக்கியும் காணப்படுவது. ***எ.கா :*** வேர். |

### கணிகங்கள்

*கணிகங்கள் இரட்டைச்சவ்வினால் சூழப்பட்ட நுண்ணுறுப்புகள், இவை உணவு உற்பத்தி & சேமிப்பில் ஈடுபடும்.*

| | |
|---|---|
| **வகைகள்** | 1) பசுங்கணிகம் (குளோரோபிளாஸ்ட்) - பச்சை நிறமுடைய கணிகம்<br>2) வண்ணக்கணிகம் (குரோமோபிளாஸ்ட்) - மஞ்சள், சிவப்பு, ஆரஞ்சு நிறமுடைய கணிகம்<br>3) வெளிர்க்கணிகம் (லியூக்கோபிளாஸ்ட்) - நிறமற்ற கணிகம் |

### ஒளிச்சேர்க்கை

$CO_2$ & *நீரின் உதவியால், சூரிய ஒளியின் முன்னிலையில் பசுங்கணிகத்தில் கார்போஹைட்ரேட் தயாரிக்கப்படுகிறது.*

$$6CO_2 + 6H_2O \xrightarrow[\text{பச்சையம்}]{\text{சூரியஒளி}} C_6H_{12}O_6 + 6O_2\uparrow$$

***குளுக்கோஸ் ஆக்சிஜன்***

| | |
|---|---|
| **ஒளிச்சேர்க்கை நிறமிகள்** | ஒளிச்சேர்க்கையில் ஈடுபடும் நிறமிகள் ***ஒளிச்சேர்க்கை நிறமிகள்*** எனப்படும்.<br>***i) முதன்மை நிறமிகள்/ வினைமையம் :*** 'பச்சையம் *a*' –சூரிய ஆற்றலை ஈர்க்கும் தன்மை கொண்ட இந்நிறமி சூரிய ஆற்றலை வேதி ஆற்றலாக மாற்றுகிறது.<br>***ii) துணை நிறமிகள்/ ஏற்பி நிறமி மூலக்கூறுகள் மையம் :*** பச்சையம் b & கரோட்டினாய்டு - இவை சூரிய ஆற்றலை கவர்ந்து முதன்மை நிறமிக்கு (பச்சையம் a) அனுப்பிவிடும். |
| **ஒளிச்சேர்க்கையில் சூரிய ஒளியின் பங்கு** | ***1) ஒளிசார்ந்த வினை (ஹில்வினை / ஒளி வினை)***<br>ஒளிச்சேர்க்கை நிறமிகள் சூரியஆற்றலை ஈர்த்து ATP & $NADPH_2$ஐ உருவாக்குகிறது.<br>***2) ஒளிசாரா வினை (கால்வின் சுழற்சி / இருள்வினை / உயிர்பொருள் உற்பத்தி நிலை)***<br>ATP & $NADPH_2$ உதவியுடன் $CO_2$ ஆனது கார்போஹைட்ரேட்டாக ஒடுக்கமடைகிறது. |
| **ஒளிச்சேர்க்கையை பாதிக்கும் காரணிகள்** | ***a) உட்புறக் காரணிகள் :***<br>i) நிறமி ii) இலையின் வயது iii) கார்போஹைட்ரேட்டின் செறிவு iv) ஹார்மோன்<br>***b) வெளிக்காரணிகள் :***<br>i) சூரிய ஒளி ii) கார்பன் டை ஆக்ஸைடு iii) வெப்பநிலை iv) நீர் v) கனிமங்கள் |

| மைட்டோகாண்ட்ரியா (செல்லின் ஆற்றல் நிலையம்) | |
|---|---|
| *செல்லில் காணப்படும் இழை அல்லது துகள் போன்ற சைட்டோபிளாச நுண்ணுறுப்பு மைட்டோகாண்ட்ரியா.* | |
| **அமைப்பு** | இது உள் மற்றும் வெளிச்சவ்வு என இரண்டு சவ்வுகளைக் கொண்டுள்ளது.<br>❋ ***வெளிபுறச்சவ்வு :*** வழவழப்பானது & உட்செல்ல அனுமதிக்கும். போரின் மூலக்கூறுகள் வெளிமூலக்கூறுகள் செல்வதற்கு கால்வாயாக செயல்படுகிறது.<br>❋ ***உட்புறச்சவ்வு :*** தேர்வு கடத்து சவ்வு. குறிப்பிட்ட பொருளை செல்ல அனுமதிக்கும்.<br>***கிரிஸ்டே*** என்பது பல நொதிகளைப் பெற்றிருக்கும் விரல் போன்ற நீட்சி ஆகும்.<br>***ஆக்ஸிசோம் :*** ATP உற்பத்தியில் ஈடுபடும் டென்னிஸ் ராக்கட் வடிவ துகள்கள்.<br>***மைட்டோகாண்ட்ரியாவின் மேட்ரிக்ஸ் :*** புரதம் மற்றும் லிப்பிடுகளைக் கொண்ட ஒரு சிக்கலான கலவையாகும். |
| **பணிகள்** | • இது செல்லின் ஆற்றல் மையமாக செயல்படுகிறது.<br>• இது செல்லின் கால்சியம் அயனிகளின் சமநிலையைப் பாதுகாக்கிறது.<br>• இது செல்லின் வளர்சிதை மாற்ற செயலில் பங்கு கொள்கிறது. |

| சுவாசித்தல் | |
|---|---|
| *சுவாசித்தல் என்பது உயிரினங்களுக்கும் வெளிச்சூழலுக்கும் இடையே நடைபெறும் வாயு பரிமாற்ற நிகழ்ச்சி.* | |
| **1) காற்று சுவாசம்** | உணவானது ஆக்ஸிஜன் உதவியால் முழுவதுமாக ஆக்ஸிகரணமடைந்து $CO_2$, நீர் மற்றும் ஆற்றலாக மாற்றப்படுகிறது.<br>$\mathbf{C_6H_{12}O_6 + 6O_2 \longrightarrow 6CO_2 + 6H_2O + ATP}$<br>***காற்று சுவாசித்தலின் படிநிலைகள் :***<br>***i) கிளைக்காலிஸிஸ் (குளுக்கோஸ் பிளப்பு) :*** இது சைட்டோபிளாசத்தில் நடைபெறும். குளுக்கோஸ் → பைருவிக் அமிலம்<br>***ii) கிரப்சுழற்சி / ட்ரை கார்பாக்ஸிலிக் அமில சுழற்சி (TCA):*** மைட்டோகாண்ட்ரியாவின் உட்கூழ்மத்தில் நடைபெறுகிறது. பைருவிக் அமிலம் → $CO_2$ & $H_2O$<br>***iii) எலக்ட்ரான் கடத்தும் சங்கிலி அமைப்பு :*** எலக்ட்ரான் கடத்தும் அமைப்பு மூலம் $NADH_2$ & $FADH_2 \rightarrow NAD^+$ & $FAD^+$ |
| **2) காற்றில்லா சுவாசம்** | இது ஆக்ஸிஜன் இல்லாத சூழலில் நடைபெறும். குளுக்கோஸானது எத்தனால் அல்லது லேக்டிக் அமிலமாக மாற்றப்படுகிறது.<br>$\mathbf{C_6H_{12}O_6 \longrightarrow 2\,CO_2 + 2C_2H_5OH +}$ ஆற்றல் (ATP) |
| **சுவாச ஈவு** | சுவாசித்தலின் போது வெளியிடப்பட்ட கார்பன் டை ஆக்ஸைடின் அளவிற்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆக்ஸிஜன் அளவிற்கும் இடையேயுள்ள விகிதம்.<br>$\text{சுவாச ஈவு} = \dfrac{\text{வெளியிடப்படும் } CO_2 \text{ அளவு}}{\text{எடுத்துக்கொள்ளப்படும் } O_2 \text{ அளவு}}$ |

| ஒருவிதையிலை வேர் | இருவிதையிலை வேர் | ஒருவிதையிலை தண்டு | இருவிதையிலை தண்டு |
|---|---|---|---|
|  |  |  |  |

## வாஸ்குலார் திசுத்தொகுப்பு

★ **இருவிதையிலை வேர்** – ஆரப்போக்கு, சைலம் வெளிநோக்கிய & நான்குமுனை. **எ.கா :** அவரை

★ **ஒருவிதையிலை வேர்** – ஆரப்போக்கு, சைலம் வெளிநோக்கிய & பலமுனை. **எ.கா :** சோளம்

★ **இருவிதையிலை தண்டு** – ஒன்றிணைந்த, ஒருங்கமைந்த, திறந்த & உள்நோக்கு சைலம். **எ.கா :** சூரியகாந்தி

★ **ஒருவிதையிலை தண்டு** – ஒன்றிணைந்த, ஒருங்கமைந்த, மூடிய & உள்நோக்கு சைலம். **எ.கா :** மக்காச்சோளம்

★ **ஒருவிதையிலை(புல்) இலை & இருவிதையிலை(மா) இலை –** ஒன்றிணைந்த, ஒருங்கமைந்த மற்றும் மூடியவை.